**இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் - 2016**

---

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1966 இன் 37 ஆம் இலக்க இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தான அதிகாரச்சட்டத்தின் 27 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம், கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் ஒரு விபரமான அறிக்கை கூட்டுத்தாபனத்தின் தலைவருக்கு 2018 யூன் 29 ஆந் திகதி வழங்கப்பட்டது.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமம்

பின்வரும் இணக்கமின்மைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

#### (அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 02

(i) நியமத்தின் 25 ஆம் பந்தியின் பிரகாரம், முதலாவது பெறுகை முதலாவது வழங்கும் முறையை (FIFO) மற்றும் நிறையளிக்கப்பட்ட சாதாரண கிரயம் (Weighted Average) முறைமை ஆகிய இரண்டு முறைமைகள் மாத்திரம் இறுதி இருப்பு மதிப்பீட்டிற்கு பரிந்துரைக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு இருவட்டுக்கள், கசெட்டுக்கள் மற்றும் சஞ்சிகைகள் பெறுமதி மதிப்பீட்டிற்காக கடைசியாக வந்தது முதலில் வழங்கல் (LIFO) முறைமை பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ii) நியமத்தின் 36 ஆம் பந்தியின் பிரகாரம் இருப்பு மதிப்பீட்டிற்காக பின்பற்றப்படும் இருப்பு பெறுமதியிடும் முறைமை நிதிக்கூற்றுக்களில் கணக்கீட்டுக் கொள்கைகளின் கீழ் வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும் கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்களில் இருப்பு பெறுமதி மதிப்பிடப்பட்ட முறைமை வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் 7**

நியமத்தின் 07 ஆம் பந்தியின் பிரகாரம் முதலீடு கையேற்கப்பட்ட திகதி முதல் முதலீடு முதிர்வடைவதற்கு எடுக்கும் காலம் 03 மாதங்களுக்கு குறைவாக இருந்தால் மாத்திரம் அப்பெறுமதி காசு மற்றும் காசுக்கு சமமானவற்றின் கீழ் முதலீடாக காண்பிக்கப்பட வேண்டிய போதிலும் 03 மாதங்களுக்கு மேற்பட்ட முதிர்ச்சிக் காலத்தை உடைய ரூபா 58,499,697 பெறுமதியான நிலையான வைப்புக்கள் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிநிலைமைக் கூற்றில் காசு மற்றும் காசுக்கு சமமானவற்றின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தன.

**(இ) இலங்கை கணக்கீட்டு நியமம் 16**

நியமத்தின் 07 ஆம் பந்தியின் பிரகாரம் ஏதேனும் ஆதனங்களில் எதிர்கால நலன்கள் நிறுவனத்திற்கு திரண்டு வருமாயின் மற்றும் ஆதனத்தின் கிரயம் நம்பகரமாக கணக்கிட முடியுமானால் அது சொத்தொன்றாக இனங்காண முடியுமான போதிலும் ஊடக அமைச்சிடமிருந்து கிடைத்திருந்த ரூபா 2,200,000 காப்புறுதி பெறுமதியான மோட்டார் வண்டியொன்று 2014 ஆம் ஆண்டு முதல் கூட்டுத்தாபனத்தினால் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டு வந்த போதிலும் அது நிலையான சொத்தொன்றாக இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) இலங்கை கணக்கீட்டு நியமம் 17**

நியமத்தின் 35 ஆம் பந்தியின் பிரகாரம் தொழிற்பாட்டுக் குத்தகை தொடர்பாக நிறுவனம் குறைந்த குத்தகை கொடுப்பனவு ஆண்டிற்கு குறைந்த 01 ஆண்டு முதல் 05 ஆண்டுகள் மற்றும் 05 ஆண்டுகளுக்கு மேற்படாத வெவ்வேறாக வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் உரிய வெளிப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**(உ) இலங்கை கணக்கீட்டு நியமம் 21**

நியமத்தின் 23(அ) பந்தியின் பிரகாரம் 2007 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரை கூட்டுத்தாபனத்தின் வெளிநாட்டு கடன்பட்டோர் அளவு 43,947.59 ஐக்கிய அமெரிக்க டொலர் மற்றும் 3,346 இந்திய ரூபாய்கள் மீளாய்வாண்டின் இறுதி திகதியில் காணப்பட்ட அந்நிய செலவாணி விகிதத்தின் அடிப்படையில் மாற்றப்பட்டிருந்த ரூபா 6,590,729 என நிதிக்கூற்றுக்களில் காண்பிப்பதற்குப் பதிலாக கடன்பட்டோர் வருமான ஆண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு காணப்பட்ட அந்நிய செலவாணி விகிதத்தின் அடிப்படையில் மாற்றப்பட்டு காண்பிக்கப்பட்டமையால் மீளாய்வாண்டின் வெளிநாட்டு கடன்பட்டோர் ரூபா 499,533 குறைத்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

**2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நுவரெலியா ''நிவஹன'' விடுமுறை கேந்திரத்தின் குத்தகை உடன்படிக்கையின் பிரகாரம், 2016 ஆம் ஆண்டின் இறுதி ஐந்து மாதங்களுக்கான குத்தகை வாடகை வருமானம் ரூபா 1,450,000 ஆக இருந்த போதிலும், அவ்வருமானம் ரூபா 435,000 என கணக்கீடு செய்யப்பட்டமையால் மீளாய்வாண்டின் குத்தகை வருமானம் ரூபா 1,015,000 ஆல் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) நிலையான வைப்புகளுக்குரிய பெறவேண்டிய வட்டி வருமானம் கணக்கிடப்பட்டு கணக்குகளுக்கு எடுக்கப்படாததன் காரணமாக 2016 திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான முதலீட்டு வட்டி வருமானம் மற்றும் அத்திகதியில் கிடைக்க வேண்டிய வட்டி வருமானம் ரூபா 813,346 ஆல் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டிற்காக திருத்த விகிதங்களின் பிரகாரம், பொருளாதார சேவைக் கட்டணங்கள் ரூபா 3,200,569 ஆக இருந்த போதிலும் அக்கட்டணங்கள் ரூபா 916,796 எனக் காண்பிக்கப்பட்ட காரணத்தினால் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய பொருளாதார சேவைக் கட்டணங்கள் ரூபா 2,283,773 குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) திருத்திய பொருளாதார சேவைக் கட்டண சட்டத்தின் பிரகாரம், நடவடிக்கை எடுக்கப்படாததன் காரணமாக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய பொருளாதார சேவைக் கட்டணங்களின் பெறுமதியான ரூபா 4,694,559 தொகை இறுதிக் கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) தலைமை அலுவலகம் மற்றும் பிராந்திய அலுவலகங்களுக்கு இடையே ஒலிபரப்புக் காலம் விற்பனை கொடுக்கல் வாங்கல்களுக்காக பராமரிக்கப்படும் பிராந்திய அலுவலக நடைமுறைக் கணக்குகளில் மீதிகளின் சீராக்கம் செய்யப்படாததன் காரணமாக 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஏற்பட்டிருந்த ரூபா 5,218,793 ஆன செலவு மீதி பரீட்சிக்கப்பட்டு தீர்வு செய்யப்படாமல் 2016 ஆம் ஆண்டின் போது நிறுத்தி வைப்பதற்கு இலாபக் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்தது.

(ஊ) தலைமை அலுவலகத்தின் கணக்குகளில் பேணப்படும் பிராந்திய சேவைகளுக்கான நடைமுறைக் கணக்குகள் மற்றும் ஒவ்வொரு பிரதேச சேவைகளில் பராமரிக்கப்படும் தலைமை அலுவலகத்துடன் நடைமுறைக் கணக்குகள் சீராக்கல் செய்யாமல் தலைமை அலுவலகத்தின் நடைமுறைக் கணக்குகளில் மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்ட ரூபா 128,321 செலவு மீதி ஆண்டின் இறுதியில் ஒலிபரப்பு கால விற்பனை கடன்கொடுத்தோருடன் சேர்த்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(எ) அளவீட்டு நடவடிக்கைகளின் போது பயன்படுத்தப்படும் ரூபா 425,000 கிரயம் பெறுமதியான பவர் லோஹர் என்ற பெயரிலான உபகரணம் காணாமல் போயிருந்த போதிலும் இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் கணக்கிலிருந்து அகற்றுவதற்கு 2016 ஆம் ஆண்டு வரை நடவடிக்கை எடுக்காமையால் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு இயந்திர மற்றும் உபகரணங்களின் கீழ் காண்பிக்கப்பட்ட மீதி அப்பெறுமானத்தினால் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஏ) முறைப்பாட்டு தரப்பினருக்குரிய ரூபா 10,000,000 தொகை ரூபா 1,783,587 மற்றும் ரூபா 80,311 என மொத்தம் ரூபா 11,863,898 கொடுப்பனவு செய்வதற்கு கட்டளையிடப்பட்ட 03 வழக்கு தீர்ப்புகளுக்கு எதிராக மீஉயர் நீதிமன்றத்திற்கும் மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கும் உயர் நீதிமன்றத்திற்கும் செய்யப்பட்டிருந்த மேன்முறையீட்டு வழக்குகளுக்காக கணக்குகளில் நிதி ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கு அல்லது மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் குறிப்புக்களின் மூலம் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஐ) கூட்டுத்தாபனத்திற்குரிய சீதுவையில் அமைந்துள்ள காணியில் ரூபா 2,908 கிரயமான 4 ஏக்கர் 35.4 பேர்ச் அளவிலான பகுதியொன்று 2005 ஆம் ஆண்டின் போது ரூபா 20,000,000 இற்கு விற்பனை செய்தமையால் கிடைத்த மூலதன இலாப நட்டம் கணக்கிடப்படாமல் மொத்த தொகையும் கட்டிட கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டடையால் காணி பகுதி விற்பனையால் நிறுவனத்திற்கு கிடைத்த மூலதன தன்மையான ரூபா 19,997,092 தொகை கணக்குகளிலிருந்து விடுபட்டிருந்ததுடன் கட்டிடக் கணக்கின் பெறுமதி ரூபா 20,000,000 ஆல் குறைத்தும் கட்டிட பெறுமானத்தேய்வு ஒதுக்கீட்டுக் கணக்கில் ரூபா 5,500,000 தொகையும் கட்டிட பெறுமானத்தேய்வு ரூபா 500,000 குறைத்தும் காட்டப்பட்டிருந்தது.

### 2.2.3. விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஐந்து கணக்கு விடயங்களுக்குரிய நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீதி ரூபா 94,284,949 இருந்த போதிலும், கணக்காய்விற்கு வழங்கப்பட்ட அட்டவணையின் பிரகாரம் அம்மீதி ரூபா 44,332,558 ஆக இருந்தமையால் அவ்வேறுபாட்டை சமப்படுத்துவதற்காக ரூபா 49,951,991 கூட்டுத்தொகையான இனங்காணப்படாத மீதிகளாக அட்டவணைகளில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட கடன்கொடுத்தோர் அட்டவணைகளில் காண்பிக்கப்படும் மீதி மற்றும் கணக்கு பிரிவின் கடன் கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கிற்கிடையே ரூபா 3,733,969 ஆன இணங்காத மீதிகள் அவதானிக்கப்பட்டன.

### 2.2.4 கணக்காய்வுகளுக்கான சான்றுகளின்மை

நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட கீழே காட்டப்பட்டுள்ள மீதிகளின் முன்னால் குறிப்பிடப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையின் காரணத்தால் அச்சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுபடுத்துவதற்கோ ஏற்றுக்கொள்ளவோ முடியாதிருந்தது.

| | கணக்கு விடயம் | பெறுமதி<br>ரூபா | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|---|
| (அ) | காணி | 7,764,234 | நிலையான சொத்துக்கள் பதிவேடு<br>பௌதீக மெய்மையாய்வு அறிக்கை |
| (ஆ) | கட்டிடங்கள் | 168,923,977 | பௌதீக மெய்மையாய்வு அறிக்கை<br>நிலையான சொத்துக்கள் பதிவேடு<br>வெளிநாடுகளிலிருந்து நன்கொடையாக கிடைத்த சொத்துக்கள் தொடர்பான கோவைகள் |
| (இ) | கடன்பட்டோர் (மரண அறிவித்தல்) | 7,997,854 | விரிவான அட்டவணை |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | நடைமுறை வேலைக்கான கொடுப்பனவுகள் (தலைமை அலுவலக புதிய கட்டிடம்) | 181,000,000 | பட்டியல்கள், உத்தேச வேலைத்திட்டங்கள், செலவீன மதிப்பீடுகள், செய்யப்பட்ட வேலை அறிக்கை |
| (உ) | 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக கணக்குகளில் காணப்படும் வியாபார மற்றும் ஏனைய பெற வேண்டிய மீதிகள் (லக்ஹண்ட கிளைக் கணக்கு) | 12,807,802 | கோவை விபரங்கள் மற்றும் பெறுமதி உருவாக்கிய விதம் முறை குறிப்பிடப்பட்ட அட்டவணைகள் |

## 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவிற்குச் செலுத்த வேண்டிய ரூபா 147,825,904 கூட்டுத்தொகையான மீதிகளில் ரூபா 141,315,701 ஆன மீதிகள் 1981 ஆம் ஆண்டிலிருந்து 2015 ஆம் ஆண்டு வரையான 35 ஆண்டு காலமாக தீர்வுசெய்யப்படாமல் காணப்படுவது அவதானிக்கப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டின் போது ரூபா 65,705,259 கூட்டுத்தொகையான வெளிநாட்டு கடன்பட்டோர் மீதிகளில் ரூபா 59,614,083 தொகை 10 வருடங்களை விட பழமையான மீதிகளாகும். அவற்றை அறவிடுவதற்கு அல்லது பதிவழிப்பதற்கு போதியளவு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2011 மற்றும் 2012 ஆண்டுகளுக்குரிய ரூபா 1110,540 ஆன கணக்காய்வு கட்டணங்களை தீர்ப்பதற்கு இதுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2016 ஆம் ஆண்டில் இனங்காணப்பட்டு தீர்வுசெய்யப்பட வேண்டிய பழைய கடன்பட்டோர் மீதிகள் ரூபா 12,609,674 தொகை வருமான செலவின ஒதுக்கத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.

(உ) 2016 ஆம் ஆண்டில் கடன்கொடுத்தொர் கட்டுப்பாட்டுக் கணக்கின் செலவு மீதியான ரூபா 1,376,083 ஆக இருந்ததுடன் விரிவான பட்டோலையில் அம்மீதி ரூபா 5,112,530 ஆக இருந்தது. ரூபா 3,736,447 தொகையான இவ்வேறுபாட்டிற்கு காரணத்தை ஆராய்ந்து சீராக்குவதற்குப் பதிலாக வருமான செலவின ஒதுக்கத்திலிருந்து கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கிற்கு மாற்றப்பட்டு இவ்வேறுபாடு சமப்படுத்தப்பட்டிருந்தது.

(ஊ) கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 1,569,930 தொகை சுயாதீன தொலைக்காட்சி சேவையிலிருந்து கிடைக்க வேண்டியதாக இருந்த போதிலும் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திற்கு செலுத்த வேண்டிய தொகையொன்று காணப்படவில்லை. மேலும் இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் கணக்கின் பிரகாரம் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திற்கு செலுத்த வேண்டிய தொகை ரூபா 26,685 எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் ஒலிபரப்புக்

கூட்டுத்தாபனத்தின் கணக்கின் பிரகாரம் ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்திற்கு செலுத்த வேண்டிய தொகையொன்று குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(எ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 222,503,345 கூட்டுப்பெறுமதியான 148 கடன்பட்டோருக்கு மீதி உறுதிப்படுத்தல் கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 1,402,024 பெறுமதியான நான்கு கடன்பட்டோர் கூட்டுத்தாபனத்திற்கு கொடுப்பனவு செய்வதற்கு கடன்மீதியொன்று இல்லையென உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.

(ஏ) 21 வருடங்களுக்கு முன்பு மற்றும் 2007 ஆம் ஆண்டின் போது நிதி இடம்பெற்ற மோசடியொன்றுக்குரிய ரூபா 503,075 கூட்டுத்தொகையான மீதி முன்னைய ஆண்டின் போது தொங்கல் கணக்கொன்றில் காண்பிக்கப்பட்டதுடன் மீளாய்வாண்டின் போது தீர்வுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் நானாவித கடன்பட்டோர் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்தது.

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை.

---

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் இணங்காமை சந்தர்ப்பக் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| | | |
|---|---|---|
| (அ) | 2006 இன் 13 ஆம் இலக்கம் மற்றும் 2017 மே 17 ஆந் திகதிய 2017 இன் 07 ஆம் இலக்க பொருளாதார சேவைக் கட்டண திருத்தச் சட்டம் | • 2016 ஏப்ரல் 01 ஆந் திகதி முதல் வரிக்குட்பட்ட விற்பனை புரள்வின் பேரில் பொருளாதார சேவைக் கட்டண வரி அளவு 0.5 சதவீதமாக இருந்த போதிலும் கூட்டுத்தாபனத்தினால் பழைய அளவான 0.25 சதவீதத்தின் கீழ் 2016/17 மதிப்பீட்டு ஆண்டிற்காக தயாரித்து சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக வரி அறிக்கைகளில் வரிப் பொறுப்பு ரூபா 1,438,537 குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.<br><br>• ஒவ்வொரு காலாண்டு இறுதியிலும் அடுத்து வரும் மாதத்தின் 20 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் உரிய காலாண்டின் கட்டணம் சுய மதிப்பீட்டு அடிப்படையில் மாதாந்தம் தவணைகள் மூலம் செலுத்த வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. வரி மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 வரை தண்டப்பணத்துடன் செலுத்த வேண்டிய மொத்த பொருளாதார சேவைக் கட்டணம் ரூபா 54,301,192 ஆக இருந்தது. |
| (ஆ) | இலங்கை கணக்காய்வு நியமம் 705 பந்தி இலக்கம் A 12 | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 3,536,443 தொகையான இருவட்டுக்கள், கசெட்டுக்கள் மற்றும் சஞ்சிகைகள் என்பவற்றிற்குரிய இருப்பு கணிப்பிடும் போது அதனை அவதானிப்பதற்காக கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு தெரியப்படுத்துவதற்கு கூட்டுத்தாபனத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (இ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை<br>---------------------------------------------------------- | |
| | 4.2.2 ஆம் பிரிவு | பணிப்பாளர் சபையினால் கூட்டிணைந்த திட்டம், பாதீடு மற்றும் செயலாற்றல் காலரீதியாக புலனாய்வு செய்யப்பட்டு உள்ளவாறான செயலாற்றல் திட்டமிடப்பட்ட செயலாற்றலுடன் வேறுபட்டிருந்ததா எனப் பரீட்சித்து அதன் பிரகாரம் கூட்டிணைந்த திட்டம் மற்றும் பாதீடு திருத்தம் செய்யப்பட வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| | 7.4.5 ஆம் பிரிவு | கூட்டுத்தாபனத்தினால் வருடாந்தம் குழு நியமிக்கப்பட்டு ஒவ்வொரு நிலையான சொத்துக்களினதும் பௌதீக இருப்பு மெய்மையாய்வு செய்யப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது வாகனங்கள் பௌதீக ரீதியாக மெய்மையாய்வு செய்யப்பட்டிருக்க வில்லை. |
| | 5.1.3 ஆம் பிரிவு மற்றும் 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 5 ஆம் பந்தி | பணிப்பாளர் சபை அங்கீகரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டத்தின் நாளதுவரையாக்கப்பட்ட பிரதிகள் நிதியாண்டு ஆரம்பமாவதற்கு 15 நாட்களுக்கு முன்னர் வரிசை அமைச்சுக்கும் பொது முயற்சிகள் திணைக்களத்திற்கும் பொதுத் திறைசேரிக்கும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கும் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2016 - 2018 இற்காக கூட்டிணைந்த திட்டமொன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 2015 யூலை 10 ஆந் திகதிய 02/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | |
| | 1 ஆம் பந்தி | பழுதடைந்த மற்றும் பயன்படுத்த முடியாத வாகனங்களை இனங்கண்டு கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் 2 வருடங்கள் முதல் 10 வருடங்கள் வரை உருக்குலைந்ததும் ஓட்டத்திலிருந்து அப்புறப்படுத்திய ரூபா 1,300,000 கிரயமான இரண்டு வாகனங்கள் மற்றும் பெறுமதி இனங்காண முடியாத வாகனமொன்றும் சுற்றறிக்கை பிரகாரம் கைதவிர்ப்பு செய்யப்பட்டிக்கவில்லை. |
| (ஊ) | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை<br>3 ஆவது அட்டவணை<br>2.11 ஆம் பந்தி | நிலையான சொத்துக்கள் பதிவேட்டிற்குப் பதிலாக கணனி மூலம் பராமரிக்கப்பட்டிருந்த நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணப்பட்டிருந்த துடன் அதில் காணி, கட்டிடங்கள், வாகனங்கள், மின்பிறப்பாக்கி இயந்திரங்கள் (ஜெனரேட்டர்) டிரான்ஸ்மீற்றர் போன்ற முக்கியமான உருப்படிகளுக்கு உரிய விபரங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (எ) | 2002 நவம்பர் 28 ஆம் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | கணனி, துணைப் பாகங்கள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பாக புறம்பான நிலையான சொத்துப் பதிவேடொன்று பேணப்பட வேண்டிய போதிலும் நிலையான சொத்துப் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஏ) | 2017 மே 17 ஆந் திகதிய 2017 இன் 7 ஆம் இலக்க பொருளாதார சேவைக் கட்டணங்கள் சட்டம் | ஒவ்வொரு காலாண்டின் இறுதியில் அடுத்துவரும் மாதத்தில் 20 ஆம் திகதியோ அல்லது அதற்கு முன்னர் குறித்த காலாண்டின் கட்டணங்கள் சுய மதிப்பீடு அடிப்படையில் மாதாந்த தவணைகளில் செலுத்தப்பட வேண்டும். எனினும், 2016 செப்தெம்பர் மாதம் தவிர ஆண்டின் ஏனைய எந்தவொரு காலாண்டிற்காகவும் மாதாந்த தவணை கொடுப்பனவு செய்யப்படாமையால் 2016 ஆம் ஆண்டிற்காக செலுத்த வேண்டிய தண்டப்பணத்திற்காக நிதிஏற்பாடு செய்யப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்படாததன் காரணமாக 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய தண்டப்பணக் கணக்கின் மீதி ரூபா 236,286 குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. |
| (ஐ) | 2016 மார்ச் 31 ஆந் திகதிய 05/2016 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் கீழே காட்டப்பட்டுள்ள சொத்துக்களுக்கு உரிய பௌதீக பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

| | | ரூபா |
|---|---|---|
| (i) | திருகோணமலை (டொயிஷ் வெல் மறு ஒலிபரப்பு கூடத்தின் நிலையான சொத்துக்கள்) | 2,173,006,103 |
| (ii) | இறுதி இருப்பு | 22,371,290 |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகள் ரூபா 57,411,250 ஆன இலாபமொன்றாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 64,280,088 ஆனமையால், முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 6,868,838 ஆன வீழ்ச்சியொன்றை காட்டியது. வருமானச் செலவினத்திற்காக அரசின் மானியம் ரூபா 15,000,000 அதிகரித்திருந்த போதிலும், ஏனைய தொழிற்பாட்டு வருமானம் ரூபா 36,541,883 ஆல் அதாவது 7.8 சதவீதத்தினால் குறைவடைந்தமை மேற்படி வீழ்ச்சிக்கு பிரதான காரணமாக இருந்தது.

மீளாய்வாண்டினதும் முன்னைய 04 வருடங்களினதும் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்யும் போது 2012 ஆம் ஆண்டு முதல் 2014 ஆண்டு வரையிலும் தேறிய நட்டமொன்று ஏற்பட்டிருந்ததுடன், 2015 மற்றும் மீளாய்வாண்டின் போது தேறிய இலாபமொன்று ஏற்பட்டிருந்தது. எவ்வாறாயினும், ஊழியர் ஊதியம், அரசிற்கு செலுத்திய வரி மற்றும் நடைமுறையல்லா சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு ஆகியவற்றை கவனத்தில் கொண்டதன் பின்னர் 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 827,054,364 தொகையான பங்களிப்பானது 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 812,449,234 ஆக இருந்தது.

## 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

முக்கியமான விகித பகுப்பாய்வு கீழே காட்டப்பட்டுள்ளன.

| விகிதங்கள் | 2014 | 2015 | 2016 |
|---|---|---|---|
| **திரவ** | | | |
| (i) நடைமுறை | 0.85:1 | 1.4:1 | 1.5:1 |
| (ii) விரைவு | 0.77:1 | 1.32:1 | 1.46:1 |
| **இலாபத்தன்மை** | | | |
| (i) மொத்த இலாபம் | 28.28 | 6.03 | 6.79 |
| (ii) தேறிய இலாபம் / (நட்டம்) | (10.42) | 12.98 | 10.96 |

(அ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் கணக்கின் பிரகாரம் நடைமுறை விகிதங்களிலும் விரைவு விகிதங்களிலும் அதிகரிப்பொன்று தென்பட்டதுடன், இதன் பிரகாரம் நடைமுறைப் பொறுப்புக்களை தீர்ப்பதற்கு போதியளவு நடைமுறைச் சொத்துக்கள் இருப்பதாக தென்படுகின்றது. எவ்வாறாயினும், கீழே காட்டப்பட்டுள்ள விடயங்களின் பிரகாரம் கணக்குகளில் காண்பிக்கப்பட்ட தரவுகளின் அடிப்படையில் கணக்கிடப்பட்ட விகிதங்கள் ஊடாக சரியான நிலைமை வெளிப்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(i) நடைமுறைச் சொத்துக்களில் உள்ளடக்கப்பட்ட கடன்பட்டோரில் 02 ஆண்டு முதல் 41 ஆண்டுகள் வரையான பழைய உள்நாட்டு கடன்பட்டோர் மீதிகள் ரூபா 52,046,735 மற்றும் வெளிநாட்டுக் கடன்பட்டோர் மீதிகள் ரூபா 61,855,400 உள்ளடக்கப்பட்டமையால் கடன் அறவீட்டு இயலுமை மற்றும் திரவத் தன்மை காணப்படாமை.

(ii) கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியில் வெளிநாட்டு கடன்பட்டோரின் அன்னியச் செலவாணி நன்மை ரூபா 6,590,729 ஆக இனங்காணப்படாமையால் வெளிநாட்டுக் கடன்பட்டோரின் உள்ளவாறான பெறுமதி நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படாமை.

(ஆ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது மீளாய்வாண்டின் மொத்த இலாப விகிதம் 6.03 சதவீதத்திலிருந்து 6.79 சதவீதம் வரை அதிகரித்திருந்ததுடன், முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மொத்த ஒலிபரப்புக் காலம் விற்பனை வருமானம் 5.82 சதவீதத்தினாலும் அதிகரித்தமை அதற்கு காரணமாக இருந்த போதிலும் மீளாய்வாண்டின் விற்பனைக் கிரயம் தவறாக கணக்கிடப்பட்டமையால் மொத்த இலாப விகிதத்தின் சரியான தன்மை தொடர்பாக முடிவுகளுக்கு வர முடியாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(இ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் மீண்டெழும் நிதிஏற்பாடுகளுக்கு முன்னர் தேறிய நட்ட விகிதம் 59.47 சதவீதம் முதல் 59.93 வீதம் வரை அதிகரித்திருந்ததுடன் மீண்டெழும் நிதிஏற்பாடுகளுக்கு பின்னர் தேறிய நட்ட விகிதம் 12.98 சதவீதம் முதல் 10.96 ஆல் குறைவடைந்திருந்தது. கடந்த ஆண்டிற்கு ஒப்பாக நிர்வாகச் செலவினம் அதிகரித்தமை மற்றும் ஏனைய தொழிற்பாட்டு வருமானம் குறைவடைந்தமை அதற்கு காரணங்களாக இருந்தன.

(ஈ) நாணயக் கடிதங்கள் திறக்கும் போது அதன் பெறுமதிக்கு சமமான பெறுமதியொன்று பாதுகாப்பிற்காக வட்டி கிடைக்கப் பெறாத கணக்கொன்றில் வைப்புச் செய்யுமாறு வங்கியால் செய்யப்பட்ட வேண்டுகோளின் பிரகாரம் திறக்கப்பட்ட கணக்கிற்கு மீளாய்வாண்டின் போது அரசிடமிருந்து கிடைத்த ரூபா 109,710,154 ஆன மூலதன மானியம் மாற்றப்பட்டிருந்ததுடன் ரூபா 100 மில்லியனுக்கு மேற்பட்ட தொகை ஆண்டு பூராகவும் எந்தவொரு நலனொன்றும் இல்லாமல் வைப்புச் செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் அதன் மீதி ரூபா 153 மில்லியனாக இருந்தது.

**3.3 கூட்டுத்தாபனத்திற்கு எதிராக அல்லது கூட்டுத்தாபனத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்டச் சம்பவங்கள்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பீபல்ஸ் டிரஸ்ட் கிரடிட் இன்வெஸ்மென்ட் கம்பனியின் கூட்டுத்தாபனத்தில் ஒலிபரப்பட்ட நிகழ்ச்சிகளுக்காக கிடைக்க வேண்டிய ரூபா 150,000 தொகையை அறவிடுவதற்காக அந்நிறுவனத்திற்கு எதிராக வழக்கு தொடரப்பட்டிருந்த போதிலும் பிரதிவாதி குடியிருந்த இடத்தை விட்டுச் சென்றுள்ளமை காரணமாக வழக்கினை நடாத்திச் செல்ல முடியாமை காரணமாக 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக நீதிமன்றத்தால் வழக்கு விசாரணை செய்யப்படாமல் இருந்தது.

(ஆ) லங்கா சீமெந்து கம்பனியின் கூட்டுத்தாபனத்தினால் ஒலிபரப்புச் செய்யப்பட்ட நிகழ்ச்சிகளுக்காக கிடைக்க வேண்டிய ரூபா 471,715 ஐ அறவிடுவதற்காக அந்நிறுவனத்திற்கு எதிராக வழக்கு தொடரப்பட்டிருந்த போதிலும் ரீட் கட்டளையொன்று எடுப்பதற்கு பிரதிவாதியின் சொத்துக்களை சமர்ப்பிக்குமாறு நீதிமன்றத்தினால் செய்யப்பட்ட கட்டளையொன்றின் பிரகாரம் கம்பனியின் சொத்துக்கள் தொடர்பான விபரங்களை சமர்ப்பிப்பதற்கு கூட்டுத்தாபனம் செயற்படாமையால் 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக நீதிமன்றத்தால் வழக்கு விசாரணை செய்யப்படாமல் இருந்தது.

(இ) விற்பனை நிறைவேற்று உத்தியோகத்தர் ஒருவரால் 02 சந்தர்ப்பங்களில் மேற்கொண்ட மோசடிகள் காரணமாக ரூபா 4,716,813 மற்றும் ரூபா 7,551,750 தொகையினை அறவிடுவதற்காக கொழும்பு மாவட்ட நீதிமன்றத்திலும் 02 மாகாண நீதிமன்றங்களிலும் வழக்கு தொடரப்பட்டிருந்த போதிலும் பிரதிவாதி குடியிருந்த இடத்தை விட்டுச் சென்றிருந்தமை காரணமாக வழக்கினை நடாத்திச் செல்ல முடியாமையால் 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக நீதிமன்றத்தால் வழக்கு விசாரணை செய்யப்படாமல் இருந்தது.

(ஈ) கிராந்துருகோட்டை சமூக வானொலியின் ஊழியர்களுக்கு சேமலாப நிதி கொடுப்பனவு செய்வதற்கு எதிராக கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் தொடரப்பட்டிருந்த வழக்கு தீர்ப்பில் ரூபா 80,311 பங்களிப்பு தொகை மற்றும் நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட கட்டளைகளுக்கு எதிராக கொழும்பு நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்யப்பட்டிருந்ததுடன் இவ்வழக்கிற்கான வழக்கு கட்டணங்களுக்காக மாத்திரம் இதுவரை ரூபா 245,000 அதாவது செலுத்த வேண்டிய இழப்பீட்டுத் தொகையிலும் மூன்று மடங்கு கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

1966 இன் 37 ஆம் இலக்க ஒலிபரப்புக் கூட்டுத்தாபன அதிகாரச்சட்டத்தின் நோக்கங்கள் பின்வருமாறு.

(i) சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகள் மூன்றுக்கான ஆகக்கூடிய நேயர்களுடனான வானொலி அலைவரிசைகளினை நடாத்திச் செல்லும் நிறுவனமொன்றாக நடவடிக்கை எடுத்தல்.

(ii) பொறுப்புடன் ஒரே தன்மையுடனான தகவல்களை துரிதமாக வழங்கும் இலங்கையின் ஊடகத்துறையின் முன்னோடியாகத் செயற்படல்.

(iii) உள்நாட்டு கலாசாரத்தின் அபிவிருத்திக்காக உயரிய மற்றும் ஆக்கபூர்வமான நிகழ்ச்சித்திட்டங்களை தயாரித்து அரங்கேற்றுதல்.

(iv) அறிவு, எண்ணம், மற்றும் ஆற்றல்களால் நிறைந்த தன்நிறைவான பதவியணியொன்றினை உருவாக்குதல் மற்றும் தேவையான பயிற்சியினை வழங்குதல்.

(v) உற்பத்தி மற்றும் ஒலிபரப்பு தொழில்நுட்பத்தினை உரிய முறையில் நாளதுவரையாக்கி உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நேயர்களுக்கு தெளிவான செவிமடுக்கும் நிலையொன்றினை வழங்குதல்.

(vi) ஒழுக்கநெறி கட்டமைப்பிற்கிணங்க நல்லொழுக்கமான வானொலி கலாச்சாரமொன்றினை உருவாக்கும் நோக்கில் முன்னோடி நிறுவனமொன்றாக செயற்படல்.

(vii) தேசிய வானொலியாக அரச கொள்கைகள் மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தல் தொடர்பில் மக்களுக்கு அறிவூட்டுவதற்காக ஆக்கபூர்வமான பங்களிப்பொன்றை வழங்குதல்.

(viii) சிறந்ததொரு நிதிக்கட்டுப்பாட்டொன்றையும் மனிதவள முகாமைத்துவத்தினையும் பேணிச்செல்லல்.

(ix) போட்டித்தன்மையுடைய சந்தையை உபாயமார்க்கத்துடன் வெற்றிக் கொள்ளல்.

கூட்டுத்தாபனத்தின் செயலாற்றல் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்பாடுகளை அடிப்படையாகக் கொண்ட கிரயத்தை கணிப்பிடும் முறைமையொன்றை அறிமுகப்படுத்துவதன் மூலம் கூட்டுத்தாபனத்தின் தேவையற்ற செலவினங்களை இனங்கண்டு அச்செலவினத்தை குறைப்பதன் மூலம் இலாபமீட்டும் நிலைமைக்கு உட்படுத்துதல் கூட்டிணைந்த திட்டத்தின் பிரகாரம் நிதிப்பிரிவின் தந்திரோபாயமாக இருந்த போதிலும் 2012 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக 2016 ஆம் ஆண்டில் ரஜரட்ட சேவை, ருஹுனு சேவை மற்றும் கந்துரட்ட சேவை ஆகிய கூட்டுத்தாபனத்தின் சகல பிராந்திய சேவைகளின் செலவினங்கள் முறையே 53.8, 16 மற்றும் 72.2 சதவீதமாக அதிகரித்திருந்ததுடன் நட்டம் 0.2, 45 மற்றும் 148 சதவீதமாக அதிகரித்திருந்தது. அதன் பிரகாரம் நிதிப்பிரிவின் மேற்படி செலவினத்தைக் கட்டுப்படுத்தும் தந்திரோபாயங்களை செயற்படுத்துவதற்கு முடியாதிருந்ததாக அவதானிக்கப்பட்டது. குறித்த பொறுப்பு வாய்ந்த தரப்பினர் தவறியுள்ளதாக உறுதிப்படுத்தப்பட்டது.

(ஆ) பிராந்திய சேவைகளின் விற்பனை தந்திரோபாயங்கள் தலைமை அலுவலகத்தின் விற்பனை தந்திரோபாயங்கள் மற்றும் ஒன்றிணைந்த தொடர்ச்சியாக செயற்படுத்தி இச்சேவைகளின் வருமான நிலைமை 50 சதவீதத்தினால் அதிகரிப்பதற்கு நிறுவனம் 2014 ஆம் ஆண்டின் கூட்டிணைந்த திட்டத்தின் மூலம் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அந்நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு திட்டமிடப்பட்ட தந்திரோபாயங்கள் வெற்றிகரமாக செயற்படுத்துவதற்கு தவறியிருந்தது.

(இ) பிராந்திய சேவைகள் மற்றும் சமூக வானொலி சேவைகளை உயர்ந்த மட்டத்திற்கு கொண்டு வருவதற்காக தேவையான கோபுரங்கள் முறைமையை நாளதுவரையாக்குதல் தற்போதைய முறையின் தாபிக்கப்பட்டுள்ள ஒலிபரப்புக் கூட உபகரணங்கள் மற்றும் உதிரிப்பாகங்கள் புதிய தொழில்நுட்பத்திற்கு ஈடுகொடுக்கும் வகையில் நாளதுவரையாக்குவதன் மூலம் உயர்ந்த மற்றும் ஆக்கபூர்வமான நிகழ்ச்சிகளை தயாரித்து வழங்குவதன் மூலம் நிறுவனத்தின் நிதி நிலைமையை நல்ல நிலைமைக்கு கொண்டு வரும் நோக்கில் 2012 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரை 05 ஆண்டுகளில் ரூபா 307,691,512 ஆன மூலதன கிரயமொன்று நிறுவனத்தனால் உரப்பட்டிருந்தது. எனினும், 2012 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக 2016 ஆம் ஆண்டில் அரசின் பங்களிப்புக்கு முன்னைய நட்டம் 61.7 சதவீதத்தினால் அதிகரித்திருந்த காரணத்தினால் மேற்படி எதிர்பார்த்த பெறுபேறுகளை அடைந்து கொள்வதற்கு நிறுவனம் தவறியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஈ) கடந்த ஐந்து ஆண்டுகளில் நிறுவனத்தின் இறுதிக் கணக்குகளை பகுப்பாய்வு செய்தபோது ஒலிபரப்புக் கால விற்பனை வருமானம் தளம்பலடைந்திருந்த போதிலும் தெளிவான அதிகரிப்பொன்று இடம்பெற்றிருக்கவில்லை. 2012 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக 2016 ஆம் ஆண்டின் விற்பனைகளில் 8.31 சதவீதமான பின்னடைவொன்று அவதானிக்கப்பட்டது. இக்காலப்பகுதியில் விற்பனைக் கிரயம் 35.83 சதவீதத்தினால் அதிகரித்திருந்ததுடன் மொத்த இலாபம் 83.22 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்திருந்தது.

(உ) விற்பனை பிரிவின் பதவியணியினர் போட்டி சந்தையுடன் தொடர்புபடும் போது பெற்றுக்கொண்ட அறிவு மற்றும் தகவல்களை போட்டி சந்தையின் சவால்களுக்கு முகங்கொடுக்க கூடிய நிகழ்ச்சிகளை தயாரிப்பதற்காக பயன்படுத்தப்படக் கூடிய முறைமையொன்றை தயாரித்து செயற்படுத்துவதற்கும் போட்டி சந்தைகளை வெற்றி கொள்வதற்கும் தேவையான சந்தை உபாயங்களை இனங்கண்டு அவற்றை கூட்டுத்தாபனத்தின் சந்தைப்படுத்தல் நடவடிக்கைகளுக்காக பயன்படுத்துவதன் ஊடாக கூட்டுத்தாபனத்தின் ஒலிபரப்புக் கால விற்பனையை மேம்படுத்துவதற்கு தந்திரோபாயங்கள் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் 2012 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக கடந்த 5 ஆண்டு ஒலிபரப்புக் கால விற்பனை வருமானம் 5.6 சதவீதத்திலிருந்து 13.4 சதவீதம் வரையான வீச்சில் குறைவடைந்திருந்தது.

## 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) காணி மற்றும் கட்டிடங்களின் பெறுமதியாக முறையே ரூபா 3,002,691 மற்றும் ரூபா 1,884,632 எனக் கணக்கீடு செய்யப்பட்டுள்ள ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் பயன்படுத்தப்படும் கொழும்பில் அமைந்துள்ள 2.5036 ஹெக்டேயர் அளவிலான காணி 1949 ஆம் ஆண்டு முதல் உடமையாக இருந்த போதிலும் இதுவரை சட்டரீதியாக கையேற்பதற்கு கூட்டுத்தாபனம் தவறியிருந்தது.

(ஆ) வர்த்தக நோக்கில் கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்காக 2012 பெப்ரவரி 23 ஆந் திகதி முதல் ரூபா 127,400,000 ஆன வருடாந்த குத்தகை கொடுப்பனவு அடிப்படையில் 2012 ஆம் ஆண்டு முதல் 30 ஆண்டு காலப்பகுதிக்கு காணியொன்றை குத்தகைக்கு எடுப்பதற்காக திம்பிரிகஸ்யாய பிரதேச செயலாளருடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு குத்தகை பணம் மற்றும் தண்டப்பணமாக ரூபா 1000 மில்லியன் செலுத்த வேண்டியிருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களில் இது தொடர்பாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) தொடர்பாடல் கோபுரமொன்றை நிர்மாணிப்பதற்காக 159 ஏக்கர் 03 ரூட் 22 பேர்ச் பரப்பளவுடன் கூடிய காணி 1959 ஆம் ஆண்டின் போது கையேற்கப்பட்டிருந்தது. கையளிப்பு நிபந்தனையின் பிரகாரம் காணி அந்நோக்கத்திற்கே பயன்படுத்தப்பட வேண்டிய போதிலும் 2006 ஆம் ஆண்டு முதல் கோபுர நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டிருந்ததுடன், காணி கையேற்ற நிபந்தனைகளுக்கு முரணாக 10 ஏக்கர் மற்றும் 19 ஏக்கர் 02 ரூட் 23.2 பேர்ச் ஆன 02 காணித்துண்டுகள் 2002 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 22,000,000 இற்கும் ரூபா 25,000,000 இற்கும் விற்பனை செய்து பெற்றுக் கொண்ட ரூபா 47,000,000 தொகை வருமானத்திற்கு எடுக்கப்பட்டிருந்தது. இக்காணியின் எஞ்சிய பகுதியில் தற்போது கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான கட்டிடங்கள் காணப்படுவதாலும் இதன் அபிவிருத்திக்காக கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்திருந்த போதிலும் எவ்வித இழப்பீட்டுத் தொகை பெற்றுக்கொள்ளப்படாமல் 2009 ஆம் ஆண்டின் போது இக்காணி மஹிந்த ராஜபக்ஷ விளையாட்டு அபிவிருத்தி மன்றத்திற்கு கூட்டுத்தாபனத்தின் இணக்கப்பாடின்றி கையேற்கப்பட்டிருந்தது.

(இ) 1989 ஆம் ஆண்டின் போது யப்பான் தொலைக்காட்சி மற்றும் யப்பான் வானொலி நிலையத்தின் (NHK) உதவியுடன் ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டதன் போது தொடர்பாடல் கட்டிடம் மற்றும் அனைத்து இயந்திரங்கள் 1993 ஆம் ஆண்டின் போது ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தலைமை அலுவலகத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தன. காணி மற்றும் கட்டிடங்கள் 2011 யூலை 29 ஆந் திகதியில் மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் ரூபா 960,000,000 இற்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் எந்தவொரு சொத்தும் கணக்கீடு செய்யப்படாதிருந்ததுடன் செயற்திட்டத்திற்குரிய எந்தவொரு கோவையும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஈ) 1974 ஆம் ஆண்டு முதல் கொள்வனவு செய்யப்பட்டு அல்லது பாவனையிலிருந்து அகற்றப்பட்ட சொத்துக்களின் கிரயத்தை இனங்காணக்கூடியவாறு ஆவணங்கள் பராமரிக்கப்படாதிருந்ததுடன் பாவனையிலிருந்து அகற்றப்பட்டு விற்பனை செய்யப்பட்டிருந்த சொத்துக்கள் கணக்குகளிலிருந்து அகற்றப்படாமை காரணமாக நிலையான சொத்துக்கள் மீதிகள் மற்றும் பௌதீக ரீதியாக காணப்படும் சொத்துக்களில் மாற்றங்கள் அவதானிக்கப்பட்டதுடன் இந்நிலையை சரிசெய்வதற்கு பொறுப்பு வாய்ந்த தரப்பினர் இதுவரை போதியளவு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) உடன்படிக்கையின் பிரகாரம் குத்தகை வாடகை கொடுப்பனவு செய்யப்படாமையால் கூட்டுத்தாபனத்திற்குரிய நுவரெலியா “நிவஹன” விடுமுறை கேந்திரத்தின் குத்தகைப் பணம் கொடுப்பனவு செய்யப்படாமை காரணமாக குத்தகையாளருக்கு எதிராக வழக்கு தொடர்ந்தும் குத்தகையாளரை வீட்டிலிருந்து அகற்றப்பட்டிருந்த போதிலும் 2005 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டின் பெப்ரவரி வரை உடன்படிக்கையின் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய ரூபா 5,106,500 ஆன குத்தகை வாடகை மற்றும் குத்தகையாளரின் ஆதன உரித்தினை மீண்டும் பெற்றுக்கொள்வதற்காக 2010 ஆம் ஆண்டு முதல் செலவிடப்பட்டிருந்த ரூபா 2,151,206 ஆன வழக்கு கட்டணத்தை அறவிடுவதற்கு கூட்டுத்தாபனத்தினால் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) நுவரெலியா ‘‘நிவஹன’’ விடுமுறை கேந்திரத்துடன் கூடிய காணியின் குத்தகைக் காலம் 2015 ஒக்தோபர் மாதத்தில் நிறைவு பெறுவதற்கு இருந்த போதிலும், அதன் காலத்தை நீடிப்புச் செய்யாமல் 2015 யூன் 01 ஆந் திகதி முதல் மூன்றாண்டு காலப்பகுதிக்கு மாதம் ரூபா 290,000 வாடகையுடன் விடுமுறை கேந்திரத்தை நடாத்திச் செல்வற்காக வெளித்தரப்பினருக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை குத்தகை வாடகை ரூபா 725,000 என அவதானிக்கப்பட்டது.

(ஏ) மீளாய்வாண்டின் சனவரி 01 இல் உள்ளவாறும் திசெம்பர் 31 இல் உள்ளவாறும் கூட்டுத்தாபனத்திடம் முறையே ரூபா 90,666,817 மற்றும் ரூபா 58,499,697 ஆன நிலையான வைப்புக்கள் உட்பட காசு மற்றும் வங்கி மீதிகள் ரூபா 260,851,451 மற்றும் ரூபா 320,286,094 ஆக இருந்த போதிலும் ரூபா 30,000,000 இற்கு மேற்பட்ட வங்கி மேலதிகப்பற்றொன்று ஆண்டு முழுவதும் பேணப்பட்டுச் சென்றமையால் ரூபா 4,600,116 ஆன மேலதிகப் பற்று வட்டி கொடுப்பனவு நேர்ந்திருந்தது.

(ஐ) 2006 இன் 13 ஆம் இலக்க பொருளாதார சேவைகள் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் முறையாக வரிக் கொடுப்பனவு செய்யப்படாமை காரணமாக 2004/2005 மதிப்பாண்டு முதல் 2014/2015 வரையான காலப்பகுதிக்குரிய நிலுவை வரியின் பேரில் ரூபா 17,987,509 மிகை கட்டணம் செலுத்த நேர்ந்திருந்தது.

### 4.3 தொழிற்பாட்டு செயற்பாடுகள்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அம்பேவல ஒலிபரப்பு கூடத்தை நிர்மாணிப்பதற்காக 1984 ஆம் ஆண்டின் போது அரசினால் நுவரெலியா மற்றும் வெளிமட பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்திற்குரிய 30 ஏக்கர் அளவிலான காணி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் குத்தகை ஒப்பந்தமொன்று மூலம் சட்டரீதியாக இக்காணியை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அக்காணி உத்தேச செயற்பாட்டிற்காக பயன்படுத்தப்பட்டிருக்க வில்லை. நுவரெலியா பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்திற்கு உரித்தான 06 ஏக்கர் அளவிலான காணிப் பகுதிக்காக குத்தகை ஒப்பந்தம் கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கையில் குறித்த பிரதேச செயலாளரால் ‘‘விதுலங்கா’’ பெயருடைய தனியார் கம்பனிக்கு இக்காணியின் ஒரு பகுதியை குத்தகைக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. மேலும், வெளிமட பிரதேச செயலாளருக்கு உரித்தான எஞ்சிய 24 ஏக்கர் அளவிலான காணிக்கான குத்தகை உரித்தினை பெற்றுக் கொள்வதற்கு கூட்டுத்தாபனம் தவறியிருந்ததுடன், கூட்டுத்தாபனத்தினால் காணியில் உள்ள இரண்டு சுற்றுலா விடுதிகள் மாத்திரம் நடாத்திச் செல்லப்பட்டிருந்தன.

(ஆ) எப்.எம். ஒலிபரப்புக் கோபுரமொன்றை நிர்மாணிப்பதற்காக 1990 ஆம் ஆண்டின் போது ரூபா 50,000 இற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்த 1.503 ஹெக்டேயர் அளவிலான கலட்டுவாவயில் உள்ள காணி உத்தேச செயற்பாட்டிற்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. அதில் 19.77 பேர்ச் இல் கோபுரமொன்றை நிர்மாணித்த லங்கா பெல் நிறுவனத்தினால் 2011 ஆம் ஆண்டிலிருந்து பயன்படுத்தி வந்த போதிலும் அதற்காக மாதாந்தம் ரூபா 15,000 வீதம் கொடுப்பனவு செய்வதற்கு அந்நிறுவனம் இணங்கியிருந்த போதிலும் இதுவரை சட்டரீதியான குத்தகை ஒப்பந்தத்திற்கு வராதிருந்தமையால் 2011 ஆம் ஆண்டு முதல் நிறுவனத்திற்கு கிடைக்க வேண்டிய நிலத்திற்காக வாடகை வருமானத்தை அறவிடுவதற்கு முடியாதிருந்தது.

(இ) ஒலிபரப்பின் கேட்கும் நிலைமை தொடர்பாக முறைப்பாடுகளை சமர்ப்பிப்பதற்கு பிரிவொன்று கூட்டுத்தாபனத்தினுள் தாபிக்கப்பட்டிருந்ததுடன் நேயர்களிடமிருந்து கூட்டுத்தாபனத்திற்கு கிடைக்கும் முறைப்பாடுகளை பதிவேடுகளுக்கு உட்படுத்துதல் கூட்டுத்தாபனத்தின் எந்தவொரு பிரிவினாலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. முறைப்பாடுகள் கேட்டல் ஆய்வு பிரிவிற்கு தொடர்புபடுத்தப்பட்டு பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டிய போதிலும் இவ்வாறான செயற்பாடொன்று இல்லாமையால் அது தொடர்பாக கூட்டுதுதாபனத்திற்கு காலரீதியாக நடவடிக்கை எடுக்க முடியாமல் இருந்தது.

**4.4 விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்**

கூட்டுத்தாபனத்தின் ஒலிபரப்பு சேவைகளை தன்னியக்கப்படுத்துவதற்காக மென்பொருட்கள் மற்றும் உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்காக 2008 ஆம் ஆண்டு முதல் பல சந்தர்ப்பங்களில் ரூபா 3,400,000 செலவு செய்யப்பட்டிருந்த போதிலும் 2017 திசெம்பர் வரையிலும் அச்சேவையிலிருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய வசதிகளை பெற்றுக்கொள்ள கூடிய வகையில் அம்மென்பொருட்களை செயற்படுத்துவதற்கு கூட்டுத்தாபனம் தவறியிருந்தது. மேலும் கணக்கீட்டிற்காக பயன்படுத்தும் மென்பொருட்களின் நிலைமையும் அதே நிலைமயில் காணப்பட்டது, இதனால் மென்பொருட்களைப் பெற்றுக்கொள்வதற்கு பாரிய தொகையொன்று செலவிடப்பட்டிருந்த அநேக செயற்பாடுகள் இதுவரை தன்னியக்கப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**4.5 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகிள்றன.

(அ) ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திற்குரிய 125 ஏக்கர் அளவிலான சீதுவ காணியில் 10 பேர்ச் வீதமான 1027 துண்டுகள் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் இணக்கப்பாடான்று இல்லாமல் 2000 – 2001 காலப்பகுதியில் கட்டான பிரதேச செயலாளரால் பொதுமக்களுக்கு இடையே பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தன. கணக்காய்வு திகதி வரையில் காணியின் உரித்து கூட்டுத்தாபனத்திடம் காணப்பட்ட போதிலும் இழப்பீட்டை அறவிடுவதற்காக போதியளவு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2016 ஒக்தோபர் 19 ஆந் திகதி முதல் 2016 ஒக்தோபர் 27 ஆந் திகதிக்கு இடைப்பட்ட திகதியொன்றில் பாதுகாப்பு பிரிவின் பொறுப்பில் இருக்கும் போது ஆய்வுகூட நிலையப் பிரிவின் பயன்பாட்டில் காணப்பட்ட ரூபா 425,000 பெறுமதியான பவர் லோஷர் அளவீட்டு உபகரணம் காணாமல் போயிருந்ததுடன், பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடமிருந்து நட்டத்தை அறவிடுவதற்காக எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4.6 பெறுகைகள் மற்றும் ஒப்பந்த செயற்பாடு**

கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான கரகஹதென்ன ஒளிபரப்புக்கூடத்தினை புதுப்பிப்பதற்கு ரூபா 104,720,555 பெறுமதியான 10 கிலோ வோட் டிரான்ஸ் மீட்டர்கள் 07 மற்றும் அன்டனா முறைமையொன்றினை கொள்வனவு செய்து பொருத்தும் ஒப்பந்தத்தை கையளிக்கும்போது டிரான்ஸ்மீட்டர் மற்றும் அன்டனா முறைமையில் வெளிக்கள சக்தியை அளவிடும் விதந்துரைகளை கருத்திற்கொள்ளாமல் ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்த காரணத்தினால் பின்னர் மேற்கொண்ட வானொலி அலைகள் சக்தி துறை பரிசோதனை அறிக்கையில் காண்பிக்கப்பட்டிருந்த பெறுமதிகள் எதிர்பார்க்கப்படும் விதந்துரைகளில் குறிப்பிடப்பட்ட ஆகக் குறைந்த பெறுமதியை விட குறைந்த பெறுமதிகளாக அவதானிக்கப்பட்டன. மேலும் பரீட்சிக்கப்பட்ட 182 சந்தர்ப்பங்களில் கிராமிய மட்டத்தில் இருக்க வேண்டிய குறைந்த பெறுமதிகள் 09 சந்தர்ப்பங்களில் மாத்திரமே பூர்த்தி செய்யப்பட்டிருந்தன.

**4.7 பதவியணியினர் நிர்வாகம்**

-----------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கூட்டுத்தாபனத்தில் 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளாறு 851 ஊழியர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த போதிலும் ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்த்தல் நடைமுறை தயாரிக்கப்பட்டு அங்கீகாரத்திற்காக அமைச்சின் செயலாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கூட்டுத்தாபனத்தின் நிரந்தர பதவியணியினர் 851 மற்றும் மிகை பதவியணியினர் 187 ஆக இருந்தனர்.

(இ) கூட்டுத்தாபனத்தின் 04 தலைமை பதவிநிலைப் பதவிகள் 03 முதல் 09 வருடங்களுக்கிடைப்பட்ட காலமாக வெற்றிடமாகக் காணப்பட்டமை காரணமாக கூட்டுத்தாபனத்தின் செயலாற்றலுக்கு நேரடியாக தாக்கமளிக்ககூடியதாக அவதானிக்கப்பட்டது.

(ஈ) நாட்டார் பாடல் ஆராய்ச்சி மற்றும் பாடல் நிகழ்ச்சித்திட்டங்களை மேற்பார்வைக்கு பணிப்பொறுப்பு அடிப்படையில் நியமிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தருக்கு நியமனக் கடிதத்தின் பிரகாரம் உரித்தான ரூபா 35,000 தொகையான மாதாந்த படிகளுக்கு மேலதிகமாக ரூபா 10,000 வீதம் மொத்தம் ரூபா 260,000 ஆன எரிபொருள் படியொன்று 2016 ஏப்ரல் 01 ஆந் திகதி முதல் இதுவரை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(உ) கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் நாயகமாக கடமையாற்றியவாறு இருக்கும் உத்தியோகத்தர் 2015 சனவரி 19 ஆந் திகதி முதல் அந்த பதவியிலிருந்து விடுவிக்கப்பட்ட போதிலும், ஒலிபரப்புக் கூட்டுத்தாபன அதிகாரச்சட்டத்தின் 19(3)(ஆ) பிரிவின் பிரகாரம் அந்த உத்தியோகத்தர் முன்பிருந்த பிரதி பணிப்பாளர் நாயகப் பதவியில் நிறுத்தப்பட்டிருந்தார். அதற்காக அமைச்சரவை அங்கீகாரமின்றி பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் பேரில் 2015 ஒக்தோபர் 19 ஆந் திகதி முதல் கூட்டுத்தாபனத்தின் மதியுரையாளர் பதவியில் நியமிக்கப்பட்டிருந்த போதிலும், அவரால் அப் பதவி பொறுப்பேற்கப்படவில்லையென அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் இந்த உத்தியோகத்தரை விடுவித்த திகதி முதல் வேறு கடமைக் கையளிப்பொன்று வழங்கி கூட்டுத்தாபனத்தின் செயலாற்றலுக்கு பங்களிப்புச் செய்யக்கூடியதாக இருக்கையில் அவ்வாறு செய்யாமல் வேறொரு பணிப்பாளர் நாயகம் நியமிக்கப்பட்டிருக்கையில் பணிப்பாளருக்கு உரித்தான உத்தியோகபூர்வ வீடு, உத்தியோக பூர்வ வாகனம், எரிபொருள், சம்பளம், ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் தொலைபேசிப் படிகளாக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,076,918 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

**4.8 வாகனப் பயன்பாடு**

------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முதலீட்டு சபையிலிருந்து கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்ட ஓட்ட நிலமையில் காணப்படும் வாகனமொன்று 2010 ஆம் ஆண்டின் போது ரூபா 2,300,000 மீள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் அதன் உரித்தை சிக்கலின்றி கூட்டுத்தாபனத்திற்கு கையேற்பதற்கு இதுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக இருந்து சேதமடைந்த ஓட்டத்திலிருந்து ஓரமாக்கப்பட்ட ஏக்கல ஒலிபரப்பு வளவில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள மஹாவலி அதிகார சபையினால் வழங்கப்பட்ட வாகனமொன்று 2010 ஆம் ஆண்டின் போது ரூபா 150,000 இற்கு மீள் மதிப்பீடு செய்து கணக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் இதுவரை அதன் உரித்தை கூட்டுத்தாபனத்திற்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்காமையால் அதனை கைதவிர்ப்பதற்கு முடியாமல் தடைப்பட்டு இருந்தது.

## 5. கணக்களிதகைமையும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைவு ஆண்டறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், நிதிக்கூற்றுக்கள் 2017 ஆகஸ்ட் 04 ஆந் திகதியே கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 5.2 கூட்டிணைந்த திட்டம்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1.2 ஆம் பிரிவு மற்றும் இலக்கம் 01/2014 அரச நிதிச் சுற்றறிக்கையின் (1) ஆம் பிரிவின் பிரகாரம் 2016-2018 ஆம் ஆண்டிற்காக கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.3 செயல்நடவடிக்கைத் திட்டம்

செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள 3 பிரிவுகளின் கீழ் 10 செயற்பாடுகள் மீளாய்வாண்டின் போது நடைமுறைப்படுத்தப்படாதிருந்ததுடன் 2 பிரிவுகளுக்குரிய 4 செயற்பாடுகள் ஆண்டின் இறுதி வரையிலும் போதியளவில் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

### 5.4 உள்ளக கணக்காய்வு

அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் பிரகாரம், உள்ளகக் கணக்காய்வு பிரிவில் 04 நிரந்தர கணக்காய்வு உதவியாளர் பதவிகள் நிலவிய போதிலும், 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக இரு கணக்காய்வு உதவியாளர்கள் மாத்திரம் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

### 5.5 பெறுகைகள் திட்டம்

2006 அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.2.1 ஆம் பந்தியின் (அ) பிரிவின் பிரகாரம் பெறுகை நிறுவகத்தினால் பிரதான பெறுகை திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டியதுடன் அப்பந்தியின் (ஆ) பிரிவின் பிரகாரம் ஆகக்குறைந்தது மூன்று வருட காலப்பகுதிகான உத்தேச பெறுகை நடவடிக்கைகளுக்காக பிரதான பெறுகைகள் திட்டத்தில் பட்டியலிடப்பட வேண்டியிருந்த போதிலும் கூட்டுத்தாபனத்தினால் 2016 ஆம் ஆண்டிற்காக மாத்திரம் பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்தது.

### 5.6 வருடாந்த அறிக்கைகளை சமர்ப்பித்தல்

2014 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிறும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.7 தீர்க்கப்படாதுள்ள கணக்காய்வுப் பந்திகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) புத்தூரில் அன்டனா கோபுரத்தை நிர்மானிக்கும் நடவடிக்கைகள், நிர்மாணத்திற்கான நிதி மற்றும் தொழில்நுட்ப ஆற்றலினைக் கவனத்தில் கொள்ளாமல் பெறுகைகள் வழிகாட்டிகளிலிருந்து விலகி 2011 யூன் 16 ஆந் திகதி தோட்பொருள் சபைக்கு கையளிக்கப்பட்டிருந்தது. நிர்மாண நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்காக முற்பணமாக தோட்பொருள் கைத்தொழில் சபைக்கு ரூபா 9,126,933 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன், நிர்மாண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாது ஒப்பந்தம் கைவிடப்பட்டிருந்தது. செலுத்திய முற்பணத் தொகையில் ரூபா 4,348,041 மாத்திரம் கூட்டுத்தாபனத்திற்கு மீள செலுத்தப்பட்டமையால், ரூபா 4,778,892 தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தது.

(ஆ) 1996 ஆம் ஆண்டின் போது 60 மீட்டர்கள் மற்றும் 100 மீட்டர்கள் உயரமான 2 அன்டனா கோபுரங்களை கொண்டு வருவதற்காக ரூபா 23,119,683 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன், கோபுரங்களை பொருத்துவதற்காக தனியார் நிறுவனமொன்றுக்கு முற்பணமாக ரூபா 2,568,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. பொருத்தப்பட வேண்டிய இடங்கள் தீர்மானிக்கப்பட்டிராமையால், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் கோபுரங்கள் பொருத்தப்பட்டிராததுடன், அந்த உபகரணங்கள் நிலப்பிரதேசத்தில் பாதுகாப்பற்ற முறையில் குவித்து வைக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(இ) கூட்டுத்தாபனத்தினால் ரூபா 860,000 செலுத்தி கொள்வனவு செய்யப்பட்டிருந்த இரு வீடுகள் (அநுராதபுரம் மற்றும் கண்டி) இற்காக ஒப்படைப்பு சான்றிதழைப் பெற்று உரிய முறையில் உரித்தினை பெற்றுக்கொள்வதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வவ்போது கூட்டுத்தாபனத்தின் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டு பரப்புகள் தொடர்பில் விஷேட அவதானம் கோரப்படுகின்றது.

| கட்டுப்பாட்டு பரப்புகள் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) கணக்கீடு | (i) கூட்டுத்தாபனத்தின் கணக்கீட்டு முறைமை நாளதுவரையாக்கப்படாமை |
| | (ii) விற்பனைக் கிரயக் கணிப்பீட்டில் தவறுகள் காணப்படல் |
| | (iii) சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானம், செலவினம் கணக்குகளிலிருந்து விடுபட்டமை அவதானிக்கப்பட்டது. |
| (ஆ) சொத்துக்கள் கட்டுப்பாடு | (i) கூட்டுத்தாபனத்தினால் கொள்வனவு செய்யப்பட்ட காணிகளுக்காக சட்ட ரீதியான உரித்துக்களை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படாமை. |

| | | | |
|---|---|---|---|
| | | (ii) | கூட்டுத்தாபனத்திற்கு உரிய பயன்படுத்தப்படாத காணிகளை பாதுகாத்துக் கொள்வதற்கு முடியாமை மற்றும் அதிகளவிலான காணிகள் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமை. |
| | | (iii) | கூட்டுத்தாபனத்திற்கு உரிய பயன்படுத்தப்படாத காணிகள் வெளித்தரப்பினரால் அத்துமீறி கையேற்கப்பட்டு இருந்தமை. |
| | | (iv) | காணி கட்டிடங்கள் பௌதீக ரீதியாக மெய்மையாய்வு செய்யப்படாமை. |
| | | (v) | சொத்துக்கள் நிர்வாகத்தின் பலவீனம் காரணமாக கூட்டுத்தாபனத்திற்கு நட்டம் ஏற்பட்டிருந்தமை. |
| | | (vi) | சில சொத்துக்கள் விற்பனை செய்யப்பட்டிருந்த போதிலும் அவை புத்தகங்களிலிருந்து அகற்றப்படாமை. |
| (இ) | பெற வேண்டிய செலுத்த வேண்டிய கணக்குகள் | (i) | 41 வருடங்களை விட பழமையான மீதிகள் அறவிடப்படாமல் காணப்படல். |
| | | (ii) | கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு மற்றும் பட்டோலைகளுக்கு இடையே வேறுபாடுகளை இனங்கண்டு சீராக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படாமை. |
| | | (iii) | கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கு மற்றும் பட்டோலைகளுக்கு இடையே வேறுபாடுகளை இனங்கண்டு சீராக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படாமை. |
| | | (iv) | 2 ஆண்டுகளுக்கும் 10 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட செலுத்தப்படாத அட்டுறு செலவினம் காணப்பட்டமை மற்றும் செலவினங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமை. |
| | | (v) | நியமங்கள் மற்றும் வரிச் சட்டங்களின் பிரகாரம் வரிப் பொறுப்புக்களை உரிய திகதியில் தீர்வுசெய்யாமை. |
| (ஈ) | இருப்புக் கட்டுப்பாடு | | நிதிக்கூற்றுக்களில் காணப்படும் இறுதி இருப்புக்கள் பௌதீக மெய்மையாய்வு செய்யப்படாமை. |
| (உ) | வாகனக் கட்டுப்பாடு | (i) | சிதைவடைந்த வாகனங்கள் மற்றும் பயன்படுத்த முடியாத வாகனங்கள் இனங்காணப்பட்டு கைதவிர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமை. |

| | | | |
|---|---|---|---|
| | | (ii) | வாகனங்கள் தொடர்பாக பௌதீக மெய்மையாய்வு மேற்கொள்ளப்படாமை. |
| (ஊ) | பதவியணியினர் நிர்வாகம் | (i) | ஆட்சேர்ப்பு நடைமுறையொன்றினை அங்கீகரித்துக் கொள்ளாமை. |
| | | (ii) | சட்டங்கள், விதிகள் பிரமாணங்களுக்கு இணங்காத வகையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட மதியுரையாளர்களுக்காக காலம் நீடிப்புச் செய்யப்படாமல் வருடக் கணக்கில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தமை. |
| | | (iii) | அங்கீகரிக்கப்படாத பதவிகளுக்காக ஆட்சேர்ப்பு செய்யப்படாமை காரணமாக ஊழியர் மிகையொன்று காணப்படல். |
| (உ) | பெறுகைகள் | (i) | விரிவான பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிராமை |
| | | (ii) | ஒலிபரப்புக்கூடத்தின் நவீனமயப்படுத்தும் ஒப்பந்தத்தில் குறைபாடுகளுடன் செயற்பட்டிருந்தமை |